CC 49/2021 Dt: 29.11.2023 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 01.00

**(Accused 1,2,3 Present.)**

**அ.சா.1 மலையபெருமாள், த.பெ. கந்தசாமி என்பவரின் முதல் விசாரணை தொடர்ச்சி :**

1. சம்பவத்தின் போது என் வீட்டில் அத்துமீறி நுழைந்து நகை மற்றும் பணத்தை பறித்து சென்ற நபர்கள் ஆஜர் 3 எதிரிகள் ஆவார்கள். சம்பவத்தன்று அவர்கள் வேறொரு பெயரை கூறினார்கள். தற்போது நினைவில்லை. மறுநாள் செய்தித்தாளில் பார்த்ததில் ஒருவரின் பெயர் வைத்தீஸ்வரன் என்று தெரியவந்தது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

2. நான் குடியிருக்கும் வீடு உள்ள பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி, கடைகள் உள்ள பகுதி என்றால் சரிதான். எனது மகன் சிசிடிவி பதிவுகளை போட்டு பார்த்தபோது 15 நாட்களுக்கு தான் பதிவுகள் இருந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், அதை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரத்தை புகாரில் சொல்லாமல் நீதிமன்றத்தில் புதிதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை நாற்காலியில் அமருமாறு சொன்னார்கள் என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை போலீஸ் விசாரணையிலும் புகாரிலும் கூறவில்லை.

3. நான் எனது முதல் விசாரணையில் "எனது மகன் பாலாஜியை மட்டும் அழைத்துக் கொண்டு ஒரு நபர் மட்டும் அவருடன் சென்றார். அப்போது கீழே இருந்த வைத்தீஸ்வரன் என்பவர் ஒரு துப்பாக்கியை எடுத்து காண்பித்து எங்களை சுட்டுவிடுவதாகவும், அமைதியாக உட்கார வேண்டும் என்று மிரட்டினார். எங்களுடைய 3 செல்போன்களையும் வைத்தீஸ்வரன் பிடுங்கிக் கொண்டார். பின்னர் என்னை மாடிக்கு வருமாறு கூப்பிட்டார்கள். என்னை மாடியில் ஒரு அறையில் வைத்து Cello tape வைத்து கட்டி வைத்துவிட்டார்கள். எனது மகன் பாலாஜியை வேறு ஒரு அறையில் அடைத்து வைத்திருந்தது அப்போது எனக்கு தெரியாது. பின்னர் எனது மனைவி சாந்தியை மாடிக்கு அழைத்தார்கள். பாலாஜி இருந்த அறையிலேயே என் மனைவியையும் அடைத்து வைத்தார்கள். பின்னர் எனது மகள் நிவேதாவை மாடிக்கு அழைத்து பாலாஜி இருந்த அறையிலேயே அடைத்து வைத்தார்கள். பின்னர் மூவரில் ஒருவர் கீழே வந்து பீரோவில் இருந்த நகைகள் நெக்லஸ், ஜிமிக்கி கம்மல் மற்றும் பணம் ரூ.3,00,000/- ஆகியவற்றை எடுத்துக் கொண்டார்கள். ஒரு நபர் வீட்டு வாசலிலேயே நின்றுக் கொண்டிருந்தார். மூவரும் முகமூடி அணிந்திருந்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி விபரத்தை புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரங்களை புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறாமல் முதல் முறையாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**CC 49/2021 Dt: 29.11.2023**

4. 2 மணி நேரம் எங்களை அடைத்து வைத்திருந்ததாக புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அப்போது வைத்தீஸ்வரன் என்னிடம் ரூ.40,00,000/- தர வேண்டும் என்றும், இல்லை என்றால் SP உங்களை அங்கேயே வைத்து காலி பண்ணுமாறு கூறியுள்ளார் என்று மிரட்டினார்கள் என்ற விபரத்தை புகாரில் கூறவில்லை, போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். வீட்டிலிருந்து வெளியே வந்து மருத்துவமனை செல்வதற்கு முன்பாக மீண்டும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது நகை மற்றும் பணம் காணாமல் போயிருந்தன. எனது கடையிலிருந்து ஊழியர்கள் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

5. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்ற விபரத்தை புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி விபரங்களை நான் புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் கூறாமல் நீதிமன்றத்தில் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மதியம் 02.00 மணிக்கு சென்றேன். என்னுடன் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டும் தனியாக காவல்நிலையத்திற்கு சென்றேன். ஆய்வாளர் பெயர் தெரியாது, ஆனால் புகாரை ஆய்வாளர் அறையில் இருந்த ஆய்வாளரிடம் தான் கொடுத்தேன்.

6. புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் ஒருவர் எழுதினார், யார் எழுதினார் என்று பெயர் எனக்கு தெரியாது. நான் புகாரை படித்து பார்த்தேன். நான் சொன்ன விபரங்கள் தான் புகாரில் இருந்தது. போலீசார் என்னிடம் 2-3 கையெழுத்து பெற்றார்கள். என் மகள் நிவேதா காலை நேரத்தில் நடைபயணம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். எனது மகள் Race coaching centre ல் வங்கி பணிக்காக படித்து வந்தார் என்றால் சரிதான். எனது மகளும் வைத்தீஸ்வரனும் காதலித்தார்கள் என்றால் இல்லை. 2019 ஆம் ஆண்டிலிருந்து இருவரும் காதலித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வைத்தீஸ்வரன் வீட்டிலிருந்து அவரது உறவினர் என் வீட்டிற்கு வந்து பெண் கேட்டார்கள் என்றால் இல்லை.

7. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. எதிரிகளின் பெயரை செய்தித்தாளில் பார்த்து தான் தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் பக்கத்துவீட்டுக்காரர்கள் யாரேனும் என்னை காப்பாற்ற முயற்சி செய்தார்களா என்றால் இல்லை. நாங்கள் எனது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு வரும்போது எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். வீட்டில் எனது மகள் நிவேதா தூங்கிக் கொண்டிருந்தார், எனவே வீட்டை

**CC 49/2021 Dt: 29.11.2023**

பூட்டிவிட்டு சென்றேன்.

8. எனது மகன் பாலாஜி எதிரே இருந்த எனது கடையில் தான் இருந்தார். பொதுவாக வழக்கமாக எனது மகள் தூங்கிக் கொண்டிருந்தால் வீட்டை பூட்டிவிட்டு செல்வோம் என்றால் சரிதான். எனது மகளை காதல் செய்த காரணத்திற்காக 1 வது எதிரி மற்றும் அவரது நண்பர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் அழைத்ததன் பேரில் தான் மேற்படி நபர்கள் எங்களிடம் வந்து பெண் கேட்டார்கள் என்றால் சரியல்ல.

9. எங்கள் வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் 6 பெண்கள் தினமும் வேலை செய்வது உண்டு. காலை 09.00 மணிக்கு வந்துவிட்டு மாலை 07.00 மணிக்கு செல்வார்கள். எனது வீட்டிற்கு அருகேயுள்ள கடையில் 15 முதல் 20 நபர்கள் வேலை செய்கின்றனர். எங்களது கடை காலை 08.00-08.30 மணியளவில் திறப்போம். எங்களது வீட்டிற்கு பக்கத்தில் முபாரக் அலி, மீரான் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அவர்களுடன் நல்ல உறவுமுறை உள்ளது என்றால் சரிதான். எனக்கு நெஞ்சுவலி வந்த சமயத்தில் எனது மகள் வீட்டில் தான் இருந்தார்.

10. நான் சமுதாயத்தில் பணம் பலம் மற்றும் அரசியல் செல்வாக்குடைய நபர் என்பதால் போலீசாரிடம் வற்புறுத்தி ஒரு பொய்யான வழக்கை எதிரிகள் மீது பதிய செய்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் இருந்த நகைகளை நானே காவல்நிலையத்தில் கொடுத்துவிட்டு, நகையை திருடிவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.